செ.வெ.எண்:14 நாள்:05.09.2019

**தூத்துக்குடி மாவட்டம், புதூர் விழுதுகள் விவசாய உற்பத்தியாளர்கள் நிறுவனத்தின் மூலம் நீடித்த நிலையான மானாவாரி இயக்கத்தின் கீழ் ரூ.20 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட சிறு தானியம், பயறு, எண்ணெய் வித்துக்கள் சுத்திகரிப்பு மற்றும் மதிப்பு கூட்டுதல் நிலையத்தினை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜூ அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்.**

---

தூத்துக்குடி மாவட்டம், புதூர் விழுதுகள் விவசாய உற்பத்தியாளர்கள் நிறுவனத்தின் மூலம் நீடித்த நிலையான மானாவாரி இயக்கத்தின் கீழ் ரூ.20 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட சிறு தானியம், பயறு, எண்ணெய் வித்துக்கள் சுத்திகரிப்பு மற்றும் மதிப்பு கூட்டுதல் நிலையம் திறப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (05.09.2019) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜூ அவர்கள் கலந்து கொண்டு சிறு தானியம், பயறு, எண்ணெய் வித்துக்கள் சுத்திகரிப்பு மற்றும் மதிப்பு கூட்டுதல் நிலையத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார். மேலும் புதூர் விழுதுகள் விவசாய உற்பத்தியாளர்கள் நிறுவனத்தின் சார்பில் 3 விவசாயிகளுக்கு பங்கு சான்றிதழ்களையும், மானிய விலையில் 02 விவசாயிகளுக்கு ரூ.6.20 லட்சம் மானியத்தில் டிராக்டர்களையும், ஒரு விவசாயிக்கு ரூ.3 ஆயிரம் மதிப்பிலான மின்விசை மருந்து தெளிக்கும் கருவியினையும், ஒரு விவசாயிக்கு ரூ.2 ஆயிரம் மதிப்பிலான தார்ப்பாயினையும், 4 விவசாயிகளுக்கு பனை விதைகளையும் என மொத்தம் 11 பயனாளிகளுக்கு ரூ.6.25 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சின்னப்பன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

பின்னர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜூ அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழக விவசாயிகளின் நலனை காக்கும் வகையில் வேளாண்துறை மூலம் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தினார்கள். மேலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தந்த திட்டத்தின் வாயிலாகதான் தமிழகத்தில் உள்ள பல்வேறு துறைகள் மிகப்பெரிய வளர்ச்சி அடைந்துள்ளது. குறிப்பாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016ம் ஆண்டு 3வது முறை முதலமைச்சராக பொறுப்பேற்றபொழுது விவசாயிகளுக்கு தேவையான பல்வேறு திட்டங்களை அறிவித்தார்கள். இந்தியாவிலேயே வேளாண் உற்பத்தியில் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது. தமிழகத்தில் உணவு தானிய உற்பத்தியில் சிறந்து விளங்கியதற்காக மத்திய அரசின் கிரிஷி கர்மான் விருதினை 7 ஆண்டுகளாக தொடர்ந்து பெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வேளாண் துறையிலும் காலத்திற்கேற்ற மாற்றங்களை செய்ய வேண்டும் என்பதற்காக உழவன் என்ற செயலியை அறிமுகப்படுத்தி அனைத்து அரசு திட்டங்களையும் விவசாயிகள் அறிந்து கொண்டு அதிக மகசூல் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் இயற்கை தாக்குதலால் மகசூல் பெற முடியாமல் பயிர் காப்பீட்டு தொகையை எதிர்பார்க்கும் நிலை இருந்தது. இந்நிலையில் இந்தியாவிலேயே வறட்சிக்கென்று நிவாரணம் அளித்தவர் மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா அவர்கள்தான்.

இந்தியாவிலேயே அதிக அளவில பயிர் காப்பீடு செய்துள்ள மாநிலம் தமிழகம்தான். தமிழகத்திலேயே விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு பெற்று வழங்கியதில் தூத்துக்குடி மாவட்டம் முதன்மை மாவட்டமாக உள்ளது. நமது மாவட்டத்தில் கோவில்பட்டி. விளாத்திகுளம், கயத்தாறு, புதூர் ஆகிய பகுதிகளில் உள்ள 40,000 விவசாயிகளுக்கு மக்காச்சோள படைப்புழு தாக்குதலுக்கு ரூ.32 கோடி இழப்பிடு வழங்கப்பட்டுள்ளது. மானாவாரி விவசாயம் இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு பகுதியில்தான் அதிகம் உள்ளது. படைப்புழு தாக்குதலில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 1 ஹெக்டேருக்கு ரூ.3,541/- நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இன்று புதூர் விழுதுகள் விவசாய உற்பத்தியாளர்கள் நிறுவனத்தின் மூலம் நீடித்த நிலையான மானாவாரி இயக்கத்தின் கீழ் ரூ.20 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட சிறு தானியம், பயறு, எண்ணெய் வித்துக்கள் சுத்திகரிப்பு மற்றும் மதிப்பு கூட்டுதல் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. புதூர் பகுதியில் அதிகமாக விவசாய தொழில் உள்ளதால் விவசாயிகளுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். புதூர் பகுதி விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இப்பகுதியில் 2 இடங்களில் வேளாண்மை துறை மூலம் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளது. இந்த கிட்டங்கிகள் விரைவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி மூலம் திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில் கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி.விஜயா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.மோகன், வேளாண்மை இணை இயக்குநர் திரு.ஆசீர்கனகராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.பாலசுப்பிரமணியன், நபார்டு திட்ட மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு.விஜயபாண்டியன், புதூர் விழுதுகள் விவசாய உற்பத்தியாளர்கள் நிறுவனத்தின் தலைவர் திரு.ராஜேந்திரன், துணைத்தலைவர் திரு.ராமகிருஷ்ணன், முதன்மை செயல் அலுவலர் திரு.சந்திரசேகர், வேளாண்மை துணை இயக்குனர்கள் திருமதி.தமிழ்மலர் (மத்திய அரசு திட்டம்), திருமதி.சாந்திராணி (வேளாண் வணிகம்), மாவட்ட செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை) திரு.ஜாகீர்உசேன் மற்றும் புதூர் விழுதுகள் விவசாய உற்பத்தியாளர்கள் நிறுவன உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.**